# பத்திரிக்கைச் செய்தி

## பட்டாவில் பெயர் நீக்கம் செய்ய ரூ.25,000/- லஞ்சம் கேட்டு பெற்ற கிராம நிர்வாக அதிகாரி கைது

புகார்தாரர் திரு.ஜெகந்நாதன், எஸ்.கொண்டாலம் கிராமம், நாமக்கல் மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர் தன்னுடைய நிலத்திற்குரிய பட்டாவில் கூடுதலாக இருந்த பெயர்களை நீக்கம் செய்ய எஸ்.கொண்டாலம் கிராமம் கிராம நிர்வாக அலுவலகம், பரமத்தி வேலூர் தாலுகா, நாமக்கல் மாவட்டத்தில் ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்திருந்தார். இவ்விண்ணப்பமானது கடந்த 17.08.2023ந் தேதி முதல் திருமதி.தீபா, கிராம நிர்வாக அதிகாரி, எஸ்.கொண்டாலம் கிராமம், கிராம நிர்வாக அலுவலகம், பரமத்தி வேலூர் தாலுகா, நாமக்கல் மாவட்டம் அவர்களிடம் நிலுவையில் இருந்தது. புகார்தாரர் தன்னுடைய கோப்பின் இருப்பு தன்மை குறித்து திருமதி.தீபா, கிராம நிர்வாக அதிகாரி அவர்களிடம் கேட்டபோது, புகார்தாரரின் விண்ணபத்தினை பரிந்துரை செய்ய தனக்கு லஞ்சமாக ரூ.25,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாமக்கல் பிரிவில் புகார் மனு கொடுத்துள்ளார். இப்புகார் சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 04.09.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.தீபா, கிராம நிர்வாக அதிகாரி, புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.25,000/-யை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார்.